# உழைக்கத் துணிந்தவனுக்குத் துக்கமில்லை

கடுமையாக உழைத்தால் எத்த கைய சிரமங்களையும் சமாளிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட் டாக விளங்குகிறார் திரு சுபாஷ் தனசேகரன், 20 (படம்).

உயர்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் அதிக ஆர்வம் காட்டிய திரு சுபாஷுக்கு, துணைப்பாட வகுப்பு ஆசிரியர் தந்த ஊக்குவிப்பும் ஆதரவும் பலதுறைத் தொழிற் கல்லூரி பாதையைத் தேர்ந்தெடுக் கச் செய்தது.

வழக்கநிலைத் தேர்வில் நல்ல தேர்ச்சி பெற்றபின், அடுத்து சாதாரண நிலையை ('ஓ' நிலை) தவிர்த்து, பலதுறைத் தொழிற்கல் லூரியில் 'Polytechnic Foundation Programme (பிஎஃப்பி)' எனும் ஓராண்டு அடிப்படைக் கல்வித் திட்டத்தில் சேர்ந்தார் திரு சுபாஷ்.

அதில் தேர்ச்சி பெற்ற பிறகு, பலதுறைத் தொழிற்கல்லூரியின் முதல் ஆண்டில் சேர்ந்த பிறகு தான் அது எவ்வளவு சிரமம் என்பதை உணர்ந்தார். இதனால் கல்வியில் சற்று பின்தங்க நேர்ந் தது. எதிர்பார்த்த மதிப்பெண் களைப் பெற முடியவில்லை.

இப்படியே போனால் பல்கலைக் கழகத்திற்குச் செல்லவேண்டும் எனும் தமது கனவு நனவாகாது என்பதை உணர்ந்து, இரண்டாம் ஆண்டில் இருந்து படிப்பில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார்.

அதற்குப் பலன் கிட்டியது. பட்டயக் கல்வியின் இறுதியில் 3.84 தரப் புள்ளிகளுடன் (ஜிபிஏ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற அவர், அந்த மதிப்பெண்கள் தமக்குப் பல்கலைக்கழகத்தில் இடத்தைப் பெற்றுத் தரும் என நம்புகிறார்.

"உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் தேர்வுகளில் சிறப்பாகச் செய்வதே முக்கிய இலக்கு. ஆனால், பலதுறைத் தொழிற்கல்லூரியில் சிறப்பாகச் செய்ய தொடக்கத்தில் இருந்தே கடினமாக உழைக்கவேண்டும். அவ்வகையில், இந்த அடிப்படைக் கல்வித் திட்டம் பலதுறைத் தொழிற் கல்லூரியின் கல்வி முறைக்கு என்னைத் தயார் செய்ய பெரிதும் உதவியது," என்றார் திரு சுபாஷ்.

அடிப்படைக் கல்வித் திட்டத் தில் ஆங்கிலம், அறிவியல் போன்ற பொதுவான பாடங்களைக் கற்றா லும், அவை பலதுறைத் தொழிற் கல்லூரிப் படிப்பை அடிப்படை யாகக் கொண்டு அமைக்கப் பட்டிருந்தன.

கல்லூரிப் படிப்பின் ஓர் அங்கமாக, திரு சுபாஷ் சிங் கப்பூர் எண்ணெய்ச் சுத்தி கரிப்பு ஆலையில் (SRC) ஆறு மாத காலத்திற்கு மாறுநேரத் தொழில்நுட்ப ராக வேலைப் பயிற்சி பெற்றார்.

"நான் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பட்டயச் சான்றிதழ் பெற்றி ருந்தாலும் இன்னும் கற் றுக்கொள்ள வேண்டியது ஏராளமாக இருக்கிறது. அனுபவமிக்க மூத்த ஊழியர்களிடமிருந்து நான் நிறைய கற்றுக்கொண்டேன்," என்றார் இவர்.

கடும் உழைப்பால் வெற் றியை ஈட்டிய திரு சுபாஷ், சக மாணவர்களுக்கும் உதவினார்.

"சுபாஷ், எங்களுக்கு முன் மாதிரி. அவரே தயாரித்த பயிற்சி தேர்வுத்தாட்களை எங்களுக்கும் தருவார். படிப்பதற்கு அது பெரும் உதவியாக அமைந்தது," என்றார் திரு சுபாஷின் நண்பரான ஜிங் ஹுவே, 20.

"பணத்தால் ஈர்க்கப்படாமல், பிறரின் வற்புறுத்தலுக்காக இன்றி, விருப்பமான துறையில், வேலை யில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டால் வருங்காலத்தில் வருந்த வேண்டி இராது," என்கிறார் திரு சுபாஷ்.

**செய்தி: எஸ்.வெங்கடேஷ்வரன்**

